**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093899

1. District மாவட்டம்: மதுரை PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 13/19 Date நாள்: 22.06.2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: Sec. 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (amendment) Act 2018.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை (1) 21.06.2019 பிற்பகல் 02.30 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை (2) 21.06.2019 மாலை 05.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.06.2019 Time நேரம் 09.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.06.2019 Time நேரம் 10.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 6 கி.மீ தென் கிழக்கு,
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி விக்ரம் சிறப்பு மருத்துவமனை, 3/424, சிவகங்கை மெயின் ரோடு, ரிங் ரோடு ஜங்ஷன். மதுரை-20.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் த. முருகவேல் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தின்மத் தேவர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.05.75 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கிளார்க்காரர் (g) Address முகவரி விக்ரம் சிறப்பு மருத்துவமனை, 3/424 சிவகங்கை மெயின் ரோடு, ரிங் ரோடு ஜங்ஷன், மதுரை-20.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. சரோஜா, தொழிலாளர் நல உதவி ஆய்வாளர், மதுரை மண்டல தொழிலாளர் நல வாரிய உதவி ஆணையாளர் அலுவலகம், பாரதி உலா வீதி, K. புதூர் மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 22/06/19 [signature] 22/06/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

22.06.2019 at 11.35 hrs

Name: பெயர் A. அம்புரோஸ் ஜெயராஜ்
Rank: நிலை ………………… No. எண் ………
காவல் ஆய்வாளர், அ.கு.க.பிரிவு, மதுரை.

GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 22.06.2019-ஆம் தேதி காலை 09.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை ரிங்ரோடு ஜங்சன், சிவகங்கை மெயின்ரோட்டில் உள்ள கதவு எண் 3/424 -ல் செயல்படும் விக்ரம் சிறப்பு மருத்துவமனையில் கணக்காளராக பணிபுரியும் தன்டித்தேவர் மகன் முருகவேல் என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வான புகார் கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: த.முருகவேல், த/பெ.தன்டித்தேவர், கணக்காளர், விக்ரம் சிறப்பு மருத்துவமனை, 3/424, சிவகங்கை மெயின்ரோடு, ரிங்ரோடு ஜங்சன், மதுரை-20. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐய்யா, எனக்குச் சொந்த ஊர் திருமங்கலம் அருகில் உள்ள அரசபட்டி கிராமம் ஆகும். நான் மதுரை யா.ஒத்தக்கடையில் கடந்த 20 வருடமாக குடியிருக்கிறேன். B.Com., PGDCA படித்துள்ளேன். கடந்த ஒரு வருடமாக விக்ரம் சிறப்பு மருத்துவமனையில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் திருமதி.தேன்மொழி என்பவரும் கணக்காளராக பணிபுரிந்து வருகிறார். நேற்று 21.06.2019-ம் மதியம் சுமார் 02.30 மணியளவில் எங்கள் மருத்துவமனைக்கு மதுரை மண்டல தொழிலாளர் நல வாரிய உதவி ஆணையர் அலுவலகத்தில் தொழிலாளர் நல உதவி ஆய்வாளராகப் பணியாற்றும் திருமதி.சரோஜா மருத்துவமனையின் உள்ளே வந்து என்னிடமும், கணக்காளர் திருமதி. தேன்மொழியிடமும் எங்கள் மருத்துவமனையின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விபரங்கள் அடங்கிய பதிவேடான **Minimum wages Register**-ஐ வாங்கி பார்வையிட்ட பின்னர், எங்கள் இருவரிடமும் மருத்துவமனை ஊழியர்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தை விட ஏன் குறைந்த ஊதியம் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு திருமதி.தேன்மொழி எங்கள் ஊழியர்களுக்கு இதுவரை முறையான ஊதியம்தான் வழங்கி வருகிறோம் என்று கூறினார். அதற்கு திருமதி.சரோஜா நாங்கள் நினைத்தால் ஏதேனும் குறைகளைக் கண்டுபிடித்து அதற்காக நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளது என்று சொல்லிவிட்டு, அவரது பதிவேட்டில் சில குறிப்புகளை எழுதிக் கொண்டு, எங்கள் மருத்துவமனையின் படிவம்-R என்ற Register of Wages பதிவேட்டின் நகலை எடுத்துக் கொண்டார். பின்னர் எங்கள் இருவரிடமும், உங்கள் மருத்துவமனை மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டுமானால், எனக்கு ரூ.15,000/- கொடுக்க வேண்டும் எனக் கேட்டார். அதற்கு நான் அவரிடம் எல்லாம் சரியாகத்தானே உள்ளது மேடம், பிறகு எதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு திருமதி.சரோஜா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் அதற்கு எந்தக் காரணமும் தேவையில்லை என்றும், மாலை 05.00 மணிக்கு பணத்துடன் பாரதி உலா வீதியில் உள்ள தனது அலுவலகத்திற்கு வந்து தன்னைச் சந்திக்குமாறும் சொல்லி விட்டு சென்றார். எனவே, மாலை 05.15 மணியளவில் நான்

திருமதி.சரோஜா பணிபுரியும் தொழிலாளர் நல வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று அவரைச் சந்தித்த போது நான் கேட்ட பணம் ரூ.15,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் எங்கள் நிர்வாக இயக்குனர் மருத்துவமனை ஆவணங்கள் அனைத்தும் சரியாக உள்ளதாக தங்களை நேரில் சந்தித்து சொல்லி வரச் சொன்னார் என்று கூறினேன். அதற்கு அவர் இது வழக்கமாக வாங்கும் தொகைதானே, வேண்டுமானால் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, ரூ.12,000/- கொடுங்கள் என்று கேட்டார். மேலும், உங்கள் மருத்துவமனையைப் பார்வையிட்ட விவரத்தையும், லேபர் சம்பளம் தொடர்பான விவரங்களையும் நான்தான் அறிக்கையாக தயார் செய்து அனுப்புவேன், பிறகு நீங்கள்தான் வீணாக அலைய வேண்டும் என்றார். அதற்கு நான் இந்த விபரத்தை எங்களது நிர்வாக இயக்குநரிடம் தெரிவித்த பின்னர் வந்து பார்க்கிறேன் என்று கூறினேன். அப்போது அவர், நாளை 22.06.2019-ம் தேதி எங்களுக்கு வேலம்மாள் மருத்துவமனையில் பயிற்சி வகுப்பு நடைபெற இருப்பதாகவும், அந்த வகுப்பு முடிந்தவுடன் மதியம் 2 மணியளவில் தான் போன் செய்வதாகவும், அப்போது தான் சொல்லுமிடத்தில் வந்து ரூ.12,000/- கொடுக்குமாறும் சொல்லி எனது போன் எண்ணை வாங்கிக் கொண்டு அவரது போன் எண்ணை எனக்கு கொடுத்தார். நான் அனைத்து விவரங்களையும் எங்கள் நிர்வாக இயக்குனர் திரு.வீரராஜ்குமார் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர் நமது மருத்துவமனை ஊழியர்களுக்கு இதுவரை நாம் உரிய ஊதியம் மற்றும் அனைத்து சலுகைகளையும் முறையாக வழங்கி வருவதால், திருமதி.சரோஜாவுக்கு லஞ்சம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்றும் மதுரை ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் அவர் மீது புகார் கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மனம் வருத்தப்பட்டு தெரிவித்தார். அவரது அறிவுரையின் பேரில் நான் மருத்துவமனை காசாளரிடம் திருமதி.சரோஜா கேட்ட லஞ்சப் பணம் ரூ.12,000/-ஐ வாங்கி வந்தேன். எந்தவித காரணமும் இல்லாமல் எங்களிடம் ரூ.12,000/- லஞ்சம் கேட்ட தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் திருமதி.சரோஜா அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மேற்சொன்ன லஞ்சப் பணத்துடன் இந்தப் புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இப்படிக்கு,(ஒ-ம்) த.முருகவேல் 22/06/19. Sir, received the written complaint on 22.06.2019 at 09.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Madurai Vigilance & Anti-Corruption in Cr.No. 13/2019 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 10.30 hrs and took up investigation Sd./-XXXXXX (A. Ambrose Jeyaraja) 22.06.2019, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original written complaint of Tr. T. Murugavel, S/o. Thandithevar, Accountant, Vikram Multi Speciality Hospital, 3/424, Sivagangai Main Road, Madurai -20, is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

22/06/19

(A. Ambrose Jeyaraja)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.